**செப்டம்பர் – 02**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் திண்டுக்கல்லில் உள்ள என்பிஆர் கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 2017-18 ஆம் ஆண்டிற்கான துலீப் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய புளு அணி நடப்பு சாம்பியனான இந்திய ரெட் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் நினைவுக் கொண்டாட்டம் தொடங்குவதை குறிக்கும் விதமாக செப்டம்பர் 29 அன்று புதுதில்லியில் மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகமானது மகாத்மா காந்தி சர்வதேச சுகாதார உச்சி மாநாட்டை (Mahatma Gandhi International Sanitation Convention - MGISC) நடத்தவிருக்கிறது.
- மத்திய அரசாங்கம் மின் வாகனங்கள் மற்றும் மாற்று எரிபொருளால் இயங்கும் தானூர்திகளை இயக்குவதற்கான அனுமதி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க முடிவு செய்துள்ளது. நாட்டில் மாசுபாடுகளை குறைப்பதற்கு இந்த வகையான வாகனங்களைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
    - புதுதில்லியில் நடைபெற்ற இந்திய தானியங்கி உற்பத்தியாளர்கள் சங்க உச்சி மாநாட்டின் (SIAM – Society of Indian Automobile Manufacturers) போது இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## திறந்த வெளிச் சிறைச்சாலை - திருமலைசமுத்திரம்

- தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருமலைசமுத்திரம் கிராமத்தில் 4வது திறந்தவெளி சிறைச்சாலை விரைவில் தொடங்கப்படவிருக்கிறது.
- தமிழ்நாடு சிறைச்சாலை கையேட்டின்படி (திறந்தவெளி சிறைச்சாலை) திறந்தவெளி சிறைச்சாலை என்பது தற்பொழுது உள்ள சிறைச்சாலைகளில் கூட்டத்தைக் குறைப்பது, சிறையில் உள்ளவர்களின் எதிர்கால மறுவாழ்விற்காக சரியான விவசாய முறையை கற்றுத் தருவது மற்றும் விவசாய உற்பத்தியில் சிறைச்சாலைகள் தன்னிறைவடைவதாகும்.
- மேலும் இதன் நோக்கம் சிறையில் உள்ள கைதிகளுக்கு சிறிதளவு சுதந்திரத்தை அளிப்பதாகும்.
- 1860-ன் மத்திய சட்டம் XLV விதிகளின்படி தண்டனை பெற்றோர், வழக்கமாகக் குற்றம் புரிபவர், பெண் கைதிகள், அரசியல் கைதிகள், அடியாள் மற்றும் கொலை செய்வதை தொழிலாகக் கொண்டவர், முதல் வகுப்பு கைதிகள் மற்றும் தப்பி செல்வதற்கு வாய்ப்புள்ள கைதிகள் ஆகியோருக்கு திறந்தவெளி சிறைச்சாலை விதிகள் பொருந்தாது.
- சிறைத் துறையானது ஏற்கெனவே இந்த வகையான திறந்தவெளி சிறைச்சாலையை கோயமுத்தூர், சேலம் மற்றும் சிவகங்கையில் அமைத்துள்ளது. இங்கு தண்டனை பெற்றோர் மற்றும் ஆயுள் தன்டணை கைதிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தேசியச் செய்திகள்

## உனது நகரங்களைத் திரட்டு – இந்தியா மற்றும் பிரான்சு

- பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுகளை குறைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வரும் மூன்று இந்திய நகரங்களுக்கு உதவுவதற்காக புது தில்லியில் இந்தியா மற்றும் பிரான்சு 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 அன்று 'உனது நகரங்களைத் திரட்டு' மீதான செயல்படுத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.




- இந்த முயற்சியானது 2015 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற 21-வது பருவநிலை மாறுபாட்டுக் கூட்டத்தில் பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் அரசாங்கங்களால் ஆதரிக்கப்பட்ட சர்வதேச முயற்சியின் ஒரு பகுதியாகும்.
- 'உனது நகரங்களைத் திரட்டு' என்பதன் நோக்கம் சோதனை அடிப்படையில் நாக்பூர், கொச்சி மற்றும் அகமதாபாத் ஆகிய 3 இந்திய நகரங்களை ஆதரிப்பது ஆகும்.

### *இத்திட்டத்தில் வழங்கப்படும் உதவிகள்*

- நீடித்த நகர போக்குவரத்து திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் திட்டமிடுதலுக்கு உதவுவது.
- நகரப் போக்குவரத்தை சீரமைப்பது, வழிகாட்டுவது மற்றும் திட்டமிடுதலுக்கான நிறுவனத் திறனை வலுப்படுத்துவதற்கு உதவுவது.
- இந்தியா முழுவதும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதை ஊக்குவிப்பதற்காக மற்ற நகரங்களிடமிருந்து கற்றுக் கொள்ளுதல் மற்றும் பகிர்ந்து கொள்ளுதல்.

## உலக வான் போக்குவரத்து புள்ளியியல் (WATS)

- சர்வதேச வான் போக்குவரத்து மன்றத்தினால் வெளியிடப்பட்ட உலக வான் போக்குவரத்து புள்ளியியல் அறிக்கையின்படி நாட்டுரிமை (Nationality) அடிப்படையில் வான் போக்குவரத்து பயன்படுத்தும் நாடுகள் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. ஐக்கிய இராஜ்ஜியம் நான்காவது இடத்தில் உள்ளது (WATS – World Air Transport Statistics).




- இந்த அறிக்கையின்படி உலக பொருளாதார நிலைகள் மற்றும் குறைவான பயணச்சீட்டின் விலை ஆகிய காரணங்களுக்காக முதன்முறையாக இந்த ஆண்டிற்கான (2017) ஒட்டுமொத்தமாக வான்வழிப் பயணத்தை மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை 4 பில்லியனைக் கடந்துள்ளது.
- 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி நடுத்தர குடிமகன் 43 மாதங்களுக்கு ஒருமுறை விமானப் பயணம் மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2017 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி நடுத்தர குடிமகன் 22 மாதங்களுக்கு ஒருமுறை விமானப் பயணம் மேற்கொள்கிறார்.

# சர்வதேசச் செய்திகள்

## கடல் சுத்தம் – கிரேட் பசிபிக் கழிவுப் பொருள் பகுதி

- உலகின் மிகப்பெரிய கழிவுப்பொருள் பகுதியான பசுபிக் கடலின் மையத்தில் சுத்தம் செய்வதற்காக கலிபோர்னியா மற்றும் ஹவாய் ஆகிய பகுதிகளுக்கு இடையே மிதக்கும் பிளாஸ்டிக் குப்பைகளை சேகரிக்க கழிவுப்பொருள் சேகரிப்பு சாதனத்தை பொறியாளர்கள் வடிவமைத்துள்ளனர்.
- சான் பிரான்சிஸ்கோவின் கடற்பகுதியில் தொடங்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் பெயர் சிஸ்டம் 001 ஆகும்.
- இந்த மிகப்பெரிய மிதக்கும் சாதனமானது கடலை சுத்தப்படுத்துதல் என்ற லாப நோக்கில்லா நிறுவனத்தின் நிறுவனரான போயன் சிலட் என்பவரால் உருவாக்கப்பட்டது. இதை உருவாக்கும்போது அவருடைய வயது 18 ஆகும்.
- சிஸ்டம் 001-ஐ போன்று தோராயமாக 60 சாதனங்கள் செயல்பாட்டில் உள்ளன. இந்த சாதனம் 5 வருடத்தில் கிரேட் பசிபிக் கழிவுப் பொருள் பகுதியில் 50 சதவீதம் கழிவுகளை அகற்றும் என்று கடலை சுத்தப்படுத்துதல் நிறுவனம் கணித்திருக்கிறது.

## இந்தியா மற்றும் செக் குடியரசுக்கிடையே ஐந்து ஒப்பந்தங்கள்

- இந்தியா மற்றும் செக் குடியரசானது பாதுகாப்பு, அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி, லேசர் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் விசா விதிமுறை தளர்த்தப்படுதல் ஆகிய ஐந்து ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- மேலும் இரு நாடுகளும் இராணுவப் பயன்பாடு அல்லாத அணுக்கரு ஆற்றல் ஒத்துழைப்பை தொடங்குவதற்காக ஒப்புக்கொண்டுள்ளன.
- ஐந்து ஒப்பந்தங்கள்
  - இந்திய அறிவியல்சார் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி மன்றம் மற்றும் செக் அறிவியல் நிறுவனம் ஆகியவற்றிற்கிடையேயான ஒத்துழைப்பு.
  - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் பல துறைகளில் இந்திய-செக் குடியரசின் திட்டங்களுக்கு உதவுதல். இந்தியாவின் சார்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை செக் குடியரசிற்கு உதவும்.
  - தூதரக பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களுக்காக விசா விதிமுறைகளை தளர்த்தலுக்கான ஒப்பந்தம்.
  - ELI பீம்லைன்ஸ் மற்றும் டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றிற்கிடையேயான லேசர் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பு.
  - ஹரியானா விவசாயப் பல்கலைக்கழகம் மற்றும் செக் வாழ்க்கை அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கிடையேயான ஒத்துழைப்பு.

# பொருளாதாரச் செய்திகள்

## கடன் மீட்பு விண்ணப்பம் – நிதி வரம்பு

- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் கடன் மீட்பு தீர்ப்பாயங்களில் (DBT – Debt Recovery Tribunals) தாக்கல் செய்யப்படும் கடன் மீட்பு விண்ணப்பத்திற்கான நிதியை இருமடங்காக 10 லட்சத்திலிருந்து 20 லட்சமாக மாற்றி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த வகையான வழக்குகள் நிலுவையில் இருப்பதை குறைப்பதற்கு உதவுவதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- இதன்படி, வங்கி அல்லது நிதிநிறுவனங்கள் அல்லது வங்கி அல்லது நிதி நிறுவனங்களின் கூட்டமைப்புகள் கடன் தொகை 20 லட்சத்திற்கு குறைவாக இருந்தால் அவை கடன் மீட்பு தீர்ப்பாயங்களை அணுக முடியாது.

### *கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் (DRT)*

- வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக கடன் மீட்பை உறுதிப்படுத்துவதற்காக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் சட்டம் 1993-ன் கீழ் முதன்முறையாக அமைக்கப்பட்டது.
- கடன் மீட்புத் தீர்ப்பாயம் தனக்கு விண்ணப்பித்த 180 நாட்களுக்குள் வழக்குகளை முடித்து வைக்க வேண்டும். இவ்வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மனுதாரர் கடன் மீட்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களில் (DRATs – Dept Recovery Appellate Tribunals) மேல்முறையீடு செய்யலாம்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விண்வெளி ஆடை - இஸ்ரோ

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO – Indian Space Research Organisation) தயாரித்த விண்வெளி ஆடையை அந்நிறுவனம் காட்சிப்படுத்தியது.
- பெங்களூரு விண்வெளிக் கண்காட்சியின் 6-வது பதிப்பின்போது அந்நிறுவனம் இந்த விண்வெளி ஆடையை காட்சிப்படுத்தியது. ஆரஞ்சு நிற முன்வடிவம் கொண்ட இந்த விண்வெளி ஆடையை திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இதை வடிவமைத்து வந்தது.



- இஸ்ரோ 2 விண்வெளி ஆடைகளை தயாரித்துள்ளது. இஸ்ரோ மற்றொரு விண்வெளி ஆடையை வடிவமைக்கவிருக்கிறது. 2022 ஆம் ஆண்டில் விண்வெளிக்கு செல்லும் 3 இந்திய வீரர்களுக்காக இஸ்ரோ இதை வடிவமைத்துள்ளது.
- பிரெஞ்சு விண்வெளி நிறுவனமான CNES ஆனது விண்வெளி மருந்து, விண்வெளி வீரரின் ஆரோக்கியத்தை கண்காணித்தல், உயிர் காக்கும் கருவிகள், கதிரியக்க பாதுகாப்பு, விண்வெளி கழிவுப் பொருட்களில் இருந்து பாதுகாத்தல் மற்றும் தனிப்பட்ட சுகாதாரம் போன்ற துறைகளில் தனது அனுபவத்தை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளும்.

# மாநிலச் செய்திகள்

## மாநில சட்ட மேலவை - ஒடிசா

- ஒடிசா மாநிலத்தில் சட்ட மேலவையை அமைப்பதற்கான தீர்மானம் அம்மாநில சட்டமன்றத்தில் (State Assembly) நிறைவேற்றப்பட்டது.
- மாநில சட்ட மேலவையை அமைப்பதற்கு பாராளுமன்ற ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு இத்தீர்மானம் அனுப்பி வைக்கப்படும்.
- பரிந்துரைக்கப்பட்ட சட்ட மேலவையில் 49 உறுப்பினர்கள் இருப்பர். இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநில சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பகுதியாகும்.
- ஒடிசா மாநில அரசானது மற்ற மாநிலங்களில் உள்ள சட்ட மேலவைகளை ஆய்வு

செய்து தனது மாநிலத்திற்கு ஒரு சட்ட மேலவையை உருவாக்குவதற்கு 2015 ஆம் ஆண்டு ஒரு குழுவை அமைத்தது. இந்தியாவின் ஆண்களின் எழுத்தறிவு வீதம் 80.9 ஆகும். பெண்களின் எழுத்தறிவு வீதம் 62.8 ஆகும்.

# முக்கியத் தினங்கள்

## சர்வதேச எழுத்தறிவு தினம் – செப்டம்பர் 08

- உலகம் முழுவதும் செப்டம்பர் 8 அன்று சர்வதேச எழுத்தறிவு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 52-வது சர்வதேச எழுத்தறிவு தினத்தின் கருத்துருவானது, 'எழுத்தறிவு மற்றும் திறன் வளர்ச்சி' ஆகும்.
- இத்தினம் 1966 ஆம் ஆண்டு அக்டோபர் 26 அன்று யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டது.
- இத்தினம் தனிநபர்கள், சமுதாய மற்றும் சமூகத்திற்காக எழுத மற்றும் படிக்கத் திறன் கொண்ட அல்லது எழுத்தறிவின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.
- யுனெஸ்கோவின் புள்ளிவிவரப்படி இந்தியாவின் எழுத்தறிவு வீதம் 72% சதவீதமாகும்.




- - - - - - - - - -